(ஈ) பாப்பாபட்டி, கீரிப்பட்டி பகுதிகளில் வேட்பாளர்கள் செல்ல முடியாத நிலை

*__திரு இரா. திருமாவளவன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மாண்புமிகு முதல்வர் சங்கரலிங்கபுரம் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி வழங்கி ஆறுதலும் சொல்லியிருக்கிறார். அதற்காக இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

தொடர்ந்து இந்த அவையில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, பிரச்சினையை எழுப்பி வருகிறேன். அங்கே ஏப்ரல் 8-ஆம் தேதி தேர்தல் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஊராட்சி தனித் தொகுதிகளில் பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும், மேல்சாத்தாமூரிலும் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பிலே வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறோம். கொட்டக்காட்சியேந்தலிலும், நாட்டார்மங்களத்திலும் அவ்வாறு செய்ய இயலவில்லை. ஆனால் இந்த மூன்று ஊராட்சி தனித் தொகுதிகளிலும் வேட்பாளர்கள் சொந்த தொகுதிக்கு, சொந்த ஊருக்குச் செல்ல முடியாத நிலையிருக்கிறது. கடுமையான பதற்றம் அங்கே நிலவுகிறது. எந்த நேரத்திலும் மீண்டும் ஒரு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமாவளவன், அது குறித்து நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதுபற்றி என்னுடைய ஆய்வில் இருக்கிறது. விரைவில் எடுத்துக்கொள்வதுபற்றி முடிவு செய்யலாம். (குறுக்கீடு) அதுதான் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளும்போது முழுமையான விளக்கத்தை நீங்கள் சொல்ல முடியும். இப்போதே எல்லாவற்றையும் சொல்லாதீர்கள். (குறுக்கீடு) என்ன என்பதைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) அதுபற்றி முடிவு செய்யலாம், அறைக்கு வாருங்கள், அது பற்றிப் பேசுவோம்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று பேரும் சேர்ந்து பேசினீர்கள் என்றால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.